Registered as News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 03 (19 . 11 . 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 274

## இந்தியாவின் விளக்கம் சிறிலங்கா நிராகரிப்பு

ஆறாவது சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டமைக்கு இந்தியாவின் பிடிவாதப் போக்கே காரணமென சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக இந்தியா தெரிவித்த கருத்துக்களை சிறிலங்கா நிராகரித்துள்ளது. அமைச்சர் ஹேரத்தின் அறிக்கை உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்ட நிகழ்வுகளைச் சரிவரப் பிரதிபலிக்கவில்லை என்று இந்தியா விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். செயலகம் மக்களால் முற்றுகை: வளவிற்குள் கொடும்பாவி எரிப்பு!

## அவல நிலையைப் போக்குமாறு ஆர்ப்பாட்டக்காரர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

பொருளாதாரத் தடையை நீக்கவும் வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் மக்கள் பட்டினியால் மடிவதைத் தடுக்கக் கோரியும், அகதி வாழ்வை அகற்றக் கோரியும் யாழ். நகரில் இருபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நேற்று நடாத்தப்பட்டன.

குழந்தைகள், மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டு உணர்ச்சி வசப்பட்டு தமது வேதனைகளை வெளிப்படுத்தினர்.

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ளமக்களும் மற்றும்பொதுமக்களும் இணைந்து இவ்வார்ப்பாட்ட பேரணியில் பெருமளவில் கலந்துகொண்டனர். இருபிரிவுகளாக நடாத்தப்பட்ட இந்தப் பேரணியில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு, இன்றையசூழ்நிலையில் தமக்கு நேர்ந்துள்ள இன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### அரச அதிகாரிகள்

## மாதிரிப் படிவத்தை நுகர்வோர் தயாரிக்கவும்

(யாழ்ப்பாணம்)

உணவு விநியோக அட்டையுடன் இணைக்கும் மாதிரிப் படிவத்தை நுகர்வோர் தாமே தயாரிக்க வேண்டுமென யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

## பெண்ணடிமை ஒழிய பெண்களே போராடவேண்டும்

பெண்ணடிமை ஒழிக்கப்பட வேண்டுமானால் பெண்களே போராடவேண்டும். உலகின் பல நாடுகளில் அடக்குமுறைகளை உடைத்து தமது சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கு பெண்களினது பங்கு சரிநிகராகவே இருந்துள்ளது. ஆனால் அந்த நாடுகளில் ஆண், பெண் என்ற வேறுபாடற்ற சமூக சுதந்திரம் நிலவுகின்றது. தமிழீழப் போராட்டத்தில் ஆரம்பத்தில் பெண்களின் பங்கு மிகவும் குறைவாகவே இருந்தது. ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் இணையக் கூடாது என்றும் பெண்கள் ஆயுதமேந்துவதற்கு வலிமையற்ற

...நாள் தொடர்பாகவிடுக்கப்பட்ட செய்தியில் குறிப்பிட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

யுத்த களங்களில் ஆண்களுக்கு சரி நிகராக நின்று போராடி பல வெற்றிகளை நிலைநாட்டினார்கள். வீரம், தீரம், தியாகம், உறுதி என்பவற்றுடன் தான் இன்று தமிழீழப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள்.

மேலும் சமூகத்தில் வேண்டத்தகாத பிற்போக்கான செயற்பாடுகளை விரும்பியோ விரும்பாமலோ தமது பண்பாட்டு வடிவமாகவே மக்கள் பார்க்கின்றனர். அதில் ஒரு சாராரின் நலனே பேணப்படுகிறது. இந்நிலையில் சமூகத்தின் உண்மை நிலைகளை

(2 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு

## இராணுவ காவலரண் மீது புலிகள் தாக்குதல்

றும்பொதுமக்களும் இணைந்து அரச அதிகாரிகள்

## தியாக சிந்தையுடன் செயற்பட வேண்டும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே தொடர்புப் பாலமாக விளங்கும் அரச அதிகாரிகள் இன்றைய இக்கட்டான சூழலில் தியாக சிந்தையுடனும், சேவை மனப்பான்மையுடனும் செயற்பட வேண்டுமென வட - கிழக்கு மாகாண ஆளுநர் நளின்செனிவரெத்தினா கேட்டுள்ளார்.

(யாழ்ப்பாணம்)

உணவு விநியோக அட்டையுடன் இணைக்கும் மாதிரிப் படிவத்தை நுகர்வோர் தாமே தயாரிக்க வேண்டுமென யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அத்தியாவசிய உணவு விநியோகத்தின் போது நுகர்வோர் தமக்குரிய உணவு வகைகளை பெற்றுக் கொள்ளும் போது உணவு அட்டையுடன் படிவம் ஒன்றினையும் சேர்த்து வழங்க வேண்டும் என்பது தெரிந்ததே.

(3 ஆம் பக்கம் பார்க்க)

பெண்கள் இணையக் கூடாது என்றும் பெண்கள் ஆயுத மேந்துவதற்கு வலிமையற்றவர்கள் என்றும் எமது சமூகம் ஒரு காலம் கருதியது. ஆனால் இன்று போராட்டத்தில் பெண்கள் இணைந்து கொள்வதைஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் எமது சமூகத்தில் ஏற்பட்டு வருகின்றது. இதற்கு காரணம் இச் சமூக அடக்கு முறையை உடைத்துக் கொண்டு போராட்டத்தில் பெண்கள் இணைந்து கொண்டமையாகும்.

இவ்வாறு தமிழீழ மாவீரர்

## அரச சார்பற்ற நிறுவனங்கள்

## சிந்தனைப் போக்கை மாற்ற முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்களை மேற்கத்தைய சிந்தனையில் இருந்து மீட்டெடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள்இங்குசெயற்பட்டு வரு

(3 ஆம் பக்கம் பார்க்க)

இலவசஇணைப்பு
1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## மொழிப் புறக்கணிப்பே பிரச்சினைக்கு காரணம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு முக்கிய காரணம் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்காமையே என்று உலக பௌத்த சமாதான மகாநாட்டின் இலங்கைச் செயலாளர் திவ்வியாகஹ ஜயசிதேரோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வாலிபர் ஒன்றியம் ஒன்று ஒழுங்கு செய்திருந்த கூட்டமொன்றில் பேசிய போதே திவ்வியாகஹ ஜயசி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் தேர்தல் காலங்களில் அளித்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றாமை, போன்ற காரணங்களே தான் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு, முக்கிய காரணமென்றும் குறிப்பிட்டார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகப் பகுதிகளுக்கு அமைச்சர்கள் விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் அமைச்சர்கள் ரணில்விக்கிரமசிங்கா, காமினி அத்துக்கோறளை, ராஜாங்க அமைச்சர் அசோகாவடிவமங்காவ, வடபிராந்திய இராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விமல ரத்தினா, வடபிராந்தியகடற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பில் உள்ள கொம்மாந்துறை சிறிலங்கா இராணுவ முகாமின் காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமைமாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கலிபர் தாக்கு; எறிகணை வீச்சு

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா உலங்கு வானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடாத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களப் பத்திரிகையாளரும் யாழ். வர கோரிக்கை

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் சிங்கள மக்களுடன் கொழும்புப் பத்திரிகையாளரும் சேர்ந்து வருவதற்கு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 40 பொலிசாரையும் அவர்கள் பெற்றோர்கள் உறவினர்கள் யாழ்ப்பாணம் வந்து பார்க்க விருப்பது தெரிந்ததே. இவர்களை கப்பல் மூலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அழைத்துவரவுள்ளது.

இந்த முக்கிய நிகழ்வில்தாங்களும் பங்கு கொள்ளவும் யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழ்நிலையை அறிந்து கொள்ளவும் கொழும்புப் பத்திரிகையாளர்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர் இது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படை பொறுப்பதிகாரியாக ஹமில்டன் வனசிங்கா நேற்று பதவி ஏற்பு

சிறிலங்காவின கூட்டுப்படைகளின் நடவடிக்கைத் தலைமை அலுவலக பணிப்பாளராக ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

நேற்றுக்காலை கூட்டுப்படைத்தலைமை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இவரது பதவியேற்பு வைபவம் இடம் பெற்றது.

1953 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து கொண்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து அரசு மகிழ்ச்சி: புலிகளின் நல்லெண்ணத்துக்கு

தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த இரு நிபுணர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் விடுதலை செய்தது குறித்து தாய்லாந்து அரசு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க இந்த தாய்லாந்து பிரஜைகளை மனிதாபிமானத்தின் அடிப்படையில் புலிகள் இயக்கம் விடுதலை செய்தது.

இந்த நல்லெண்ண நடவடிக்கை தாய்லாந்து அரசுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பிலுள்ள தாய்லாந்து ஆதரவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## 'புலிகளின் குரல்' ஓராண்டு பூர்த்திவிழா

புலிகளின் குரல் வானொலி சேவையின் ஓராண்டு பூர்த்தி விழா நாளை மாலை 3.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் புலிகளின் குரல் வானொலி சேவையின் ஆய்வுரை, நாட்டியாஞ்சலி, நாடகம், வில்லிசை மற்றும் இசை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளது.

## வரி விளம்பரம்

### விவாகப் பொருத்துனர் சேவை நிலையம்

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பலதரப்பட்ட உத்தியோகம் வகிக்கும் றோமன் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து கிறீஸ்தவரதும் கிறீஸ்தவரல்லாதோரதும் விபரக் கொடுத்து (ஏடு) நிரம்ப ஜாஸ்தியாக எம்மிடமுண்டு. தொடர்பு: எஸ். எ. தர்மலிங்கம் 24, புறாடி லேன். கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.
(R/1940)

### இடமாற்றம்

தீவகத்தில் நவீன வைத்திய வசதிகள் கொண்ட ''இரெட்ணம் வைத்தியசாலை'' இல. 129 ஸ்ரேசன்றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் (தங்குமிட வாட் வசதிகள் உட்பட) தொடர்ந்து சேவையாற்றுகிறது.
(R/1941)

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்துறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவில் உள்ள இருபாலைச்சந்தி குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம்.
(R/1942)

## மரம் வீழ்ந்து பெண் பலி

பனைமரமும், மின்சாரக் கம்பமும் ஒன்றாக விழுந்ததில் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்மணி அதில் சிக்குண்டு மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை, வீட்டிலிருந்து, கடையை நோக்கிச் சென்ற திருமதி கு. அற்புதம் (வயது50) துன்னாலையென்பவரே மரணமானார்.

பருத்தித்துறைப் பகுதியில் வீடொன்றின் மேல் பனை முந்ததில் குழந்தை ஒன்று சிறிய காயத்திற்குள்ளானது.

# வடமராட்சிப் பகுதியில் மாவீரர் தின ஏற்பாடுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மாவீரர்தின ஒழுங்குகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மாவீரர்தின ஒழுங்குகளை மேற்கொள்வதற்கென கரவெட்டியில் 35 கிராமியக் குழுக்களும், பருத்தித்துறையில் 35 கிராமியக் குழுக்களும், வடமராட்சி கிழக்கில் 17 கிராமியக் குழுக்களும், அக்கவேலியில் 07 கிராமியக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. வீதிகள், ஒழுங்கைகள், பொது இடங்கள் யாவும் சிரமதான முறையில் சுத்திகரிக்கப்பட்டு வருகின்றன. நெல்லியடி, புலோலி, வல்வெட்டித்துறை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அலங்கார வளைவுகள், அலங்காரப் பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. இவைகளில் மாவீரர்களின் விடுதலைப் பங்களிப்புகள் தொடர்பான கருத்துச் சித்திரங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. சில இடங்களில் பார்வைக்கு மிக அழகான பெரிய பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் மட்டத்தில் மாவீரர் தினத்தையொட்டிய கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. வடமராட்சியில் பல்வேறு இடங்களில் மாவீரர் வார விழாக்கள் வெகு சிறப்பாகவும் எழுச்சிமிக்கவையாகவும் இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இம் மாவீரர் வார இறுதிநாளன்று பருத்தித்துறை பழைய சந்தை மைதானத்தில் மாவீரர் வார மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறுமெனவும் இக் கூட்டத்திலே விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலர் உரையாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் மாவீரர் எழுச்சி வார நிகழ்ச்சிகள் 15ஆம் திகதி ஆரம்பமாகியதைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளிலும் நாள்தோறும் மாவீரர்எழுச்சி வார கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன.

இக்கருத்தரங்குகளில் மாவீரர் தியாகங்கள், மாவீரர் நாள் மகிமை, மாவீரர் வார நிகழ்ச்சி நடவடிக்கைகள் பற்றிய கருத்துரைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு வடமராட்சி பொறுப்பாளர் திரு மாவிகரன் பருத்தித்துறைப் பொறுப்பாளர் திரு. முரளி, மகளிர் முன்னணி உறுப்பினர்கள் செல்வி சந்திரிகா, செல்வி கீர்த்தனா உட்பட பல உறுப்பினர்கள் வழங்கி வருகின்றனர். வடமராட்சியின் பல பாகங்களிலும் மாவீரர்களின் மகிமை பற்றிய ஏராட்ட நிழ்வுகளும் இடம் பெற்று வருகின்றன. (25)

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சந்தியில் புத்தகங்கள் அடங்கிய ஒரு கறுப்பு பை விஜயரட்ணம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வட்டாரம் ஒவ்வொன்றிலும் சுகாதாரக் குழுக்கள்

(சுச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சுகாதார குழு நியமிக்கப்பட்டு வருகின்றது (முதலாவதாக சென்ற 13 ஆம் திகதி யாழ் சுகாதார பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தலைமையில் வண்ணை, கொழும்புத்துறை கச்சேரி போன்ற 7 ஆம், 8 ஆம், 10 ஆம், வட்டாரங்களுக்குரிய சுகாதார குழுக்கள் நியமிக்கப்பட்டன.

ஒவ்வொரு குழுவிலும் 9 பேர் அங்கம் வகிப்பர். (43)

## பெண்ணடிமை

கூறுகூறாக காட்டியும் அதில் வெற்றிகாண முடியவில்லை. காரணம் இந்த உண்மைகளை வெளிக்காட்டும்போது உண்மையின் பக்கம் வலிமை இருக்கவில்லை. இதனால்ச தி ஒழியவில்லை பெண்ணடிமை தீரவில்லை. சமூகத்தின் மூட நம்பிக்கைகள் ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்ததாக இல்லை.

ஆனால் இன்று எமது தமிழ்ச் சமூகம் ஒரு போராட்டத்தை நடத்துகின்றது. இப் போராட்டமானது மண்ணை மீட்பது மட்டுமின்றி உண்மையான உன்னதமான சமூக அமைப்பையும் உருவாக்கச் செய்கின்றது எமது சமூகம் எப்படி இருக்கிறது, எப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிக்கொணரும்போது அது

## விரைவில் எழுதுவினைஞர்

# மாவீரர் வாரம் 21 நவம்பர் முதல் 27 நவம்பர் வரை

## எரிக் கோனேக்கர் ஜேர்மனிக்கு

(மாஸ்கோ)

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான எரிக் கோனேக்கரை ஜேர்மனிக்குத் திருப்பி அனுப்ப ரஷ்யா முடிவு செய்துள்ளது.

ரஷ்யக் குடியரசின் நீதித்துறைத்தலைவர் நிக்கோலாய் மாஸ்கோவில் கடந்த சனிக்கிழமை இதனை அறிவித்தார் அவர் மேலும் கூறுகையில் ரஷ்யக்குடியரசு அதிபர் பொரிஸ்யெல்ட்சின் தலைமையில் கூடியமுக்கிய தலைவர்களே இம் முடிவை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 19



### கோபி

(இளங்கோ - தும்பளை)

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார், அடம்பன் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு தமிழர்கள்

...சிறிய காயத்திற்குள்ளானது.

சென்ற 13 ஆம் திகதி ...

...டாரங்களுக்குரிய ... குழுக்கள் நியமிக்கப்பட்டன.

ஒவ்வொரு குழுவிலும் 9 பேர் அங்கம் வகிப்பர். (43)

# விரைவில் எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எழுது வினைஞர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை மிக விரைவில் நடாத்தப்படவிருக்கின்றது.

யாழ். செயலகம் எழுது வினைஞர்களின் நியமனத்துக்கான சகல வேலைகளையும் பூர்த்தி செய்துள்ளது. போட்டிப்பரீட்சைக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படவிருக்கின்றது. (ஏ)

# கொழும்புத்துறையில் மாவீரர்தின ஒழுங்குகள்

(ஈச்சமோட்டை)

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினரால் பல வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

திடகள விளையாட்டுப் போட்டிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன இதில் கடந்த சனிக்கிழமை 5 மைல் மரதன் ஓட்டம் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் என்பன கொழும்புத்துறையில் இடம்பெற்றன. அத்தோடு மாவீரர் இலக்கியன் நினைவாக எதிர்வரும் 21 ஆம் திகதி பாலர் கல்விக்கூடம் முனங்கு அரியாலை கிழக்கிலும், மாவீரர் ஈசன் நினைவாக 22 ம் திகதி பாலர் கல்விக் கூடம் மக்கள் சந்தை என்பன நாவலடி அரியாலையிலும் மாவீரர் இமெல்டா நினைவாக 23 ஆம் திகதி பாலர் கல்விக்கூடம், மணிப்புரியிலும், 24 ஆம் திகதி மாவீரர் அருந்ததி நினைவாக பாலர் பாடசாலை உதயபுரத்திலும் திறந்து வைக்கப்படுகின்றன இதனை அடுத்து கலை நிகழ்ச்சிகளும் அவ்வப்பகுதியில் இடம் பெறும் இதற்கான சகல ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (43)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

மருத்துவபீடம்

மூன்றாவது வருட மருத்துவப்பயிற்சி நெறி ஆரம்பம் (1988 பிரிவு)

மூன்றாவது வருட மருத்துவப் பயிற்சிநெறி (1988 பிரிவு) 1992 ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பதிவாளர்

(B/3494)


# வீர வேங்கை பாரி

(நமது நிருபர்)

வீரவேங்கை பாரி (விந்தியானந்தன். இராசரத்தினம் நீர்வேலி) கடந்த யூன் மாதம்



19 ஆம் திகதி மன்னாரில் இடம் பெற்ற சிறிலங்கா ராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவு எய்தினார்.

# மாவீரர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கல்விக் கோட்டத்திற்கான மாவீரர் தின விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வேலணைக் கோட்டத்தைச் சார்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் கேட்டுக் கொள்கின்றார்.

எப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிக்கொணரும்போது அது ஏற்கப்படுகிறது, மாற்றமடைகிறது. காலப்போக்கில் பிற்போக்கானவைகள் களையப்பட்டு ஒரு உண்மையான சமூக அமைப்பை தமிழ் மக்கள் கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கை உறுதியாக உணரப்படுகிறது.

இதற்கு காரணம் எமது போராட்டமே ஆகும். எமது போராட்டம் வலிமையானதாக இருக்கிறது. மண்ணுக்காக, மக்களுக்காக மரணத்தை தழுவுகின்ற தியாகிகளும் சமூகத்தை ஒழுங்கமைக்கும் கொள்கைகளும் சமூகத்தின் மத்தியில் உணர்த்தப்படுகின்றன.

இந்நிலையில் இன ஒடுக்குமுறையானாலும் சரி, சமூக ஒடுக்கு முறையானாலும் சரி, உடல், உளரீதியாக இதற்கு முதலில் முகம் கொடுப்பவர்கள் பெண்களே. எனவே பெண்களின் பாதுகாப்பு, சுதந்திரம், என்பது பெண் சமூகத்தின் தேவை. இவற்றை முழுச் சமூகமுமே உணர்ந்துகொள்ள வேண்டியதாகும். உலகில் பல நாடுகளில் தலைவர்களாக இருந்த பெண்கள் ஆட்சி நடாத்தினார்களே தவிர சமூகத்தின் பாதுகாப்பை எழுச்சியை, விடுதலையை பற்றி கருதவில்லை. எனவே பெண்களின் விடுதலை என்பது அவர்கள் தாமாக முயலாவிடில் சாத்தியமாகாது.

போர்க்களம் சென்று 300 க்கு மேற்பட்ட பெண் போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர். இந்த மாவீரர் வாரத்தில் மறைந்த வேங்கைகளை நினைவு கொள்ளும் போது அவர்களுடைய இலட்சியங்களையும் இறுகப்பற்றுவோம். சமத்துவமான சுதந்திர தமிழீழம் அமைக்கும் வரை போராடுவோம் என உறுதி கொள்வோம்.

...டுக் கொல்லப்பட்ட நான்கு தமிழர்கள்

1985 ஆம் ஆண்டு தமிழகத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மோட்டார் சயிக்கிள் விபத்தில் எம்மைப்பிரிந்த

கோபி [இளங்கோ - தும்பளை, பருத்தித்துறை]

1986 ஆம் ஆண்டு பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது நிகழ்ந்த உலங்கு வானூர்தித் தாக்குதலில் காயமுற்று வீரச்சாவெய்திய

சாள்ஸ் [மகாதேவன் மணிவண்ணன் - பருத்தித்துறை]

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 3 குழந்தைகள், தந்தை

1988 ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப் படையினர் கைது செய்ய முற்பட்டபோது ஒரே சயனைட் பகிர்ந்து உட்கொண்டு வீரச்சாவெய்திய

சக்கரை [தம்புதுரைராசா - காரைநகர்]

கோபி [ஆறுமுகம் தயபாலன் - காரைநகர்]

கிளிநொச்சியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்

1990 ஆம் ஆண்டு மாங்குளம், தச்சன் காட்டுச் சந்தியில் சிறிலங்காப் படையினரின் முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய

2ஆம் லெப். மணிமோகன் [இராசையா அனுராம் - சோத்துப்பிடிச்சி, சண்டிலிப்பாய் தெற்கு]

பருத்தித்துறை, புலோலிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3489)

## சிந்தனைக்கு

சட்டத்தைப்பற்றி எனக்கென்ன கவலை?
என்னிடம் தான் அதிகாரம் இருக்கிறதே
— கொர்னீலியஸ் வேன்டர்பில்ட்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 19-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05


# வங்காளவிரிகுடாவில் பொலிஸ்கார தனம்

சர்வதேசக் கடற்பரப்பினுள் வைத்து விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் கப்பல் ஒன்றை இந்தியக் கடற்படை வழிமறித்து கைப்பற்றியுள்ளதோடு, அதிலிருந்து 10 பேரையும் கைது செய்துள்ளது. இது தொடர்பாக சென்னை நீதிபதியின் முன் தமது நிலையை விளக்கிக் கூறிய பிடிக்கப்பட்ட கப்பலின் பொறுப்பாளர் திரு. பாலன் இந்தியக் கடல் எல்லைக்கு அப்பால், சர்வதேச கடற் பிராந்தியத்தில் வைத்தே இந்தியக் கடற்படை எம்மைப் பிடித்தது. இந்தியக் கடலெல்லை கரையோரத்தில் இருந்து 60 கடல் மைல்கள் நீளமானதாகும். எம்மைப் பிடித்ததோ கரையோரத்தில் இருந்து 400 கடல் மைல்களுக்கு அப்பால் வைத்தாகும் எனத் தெரிவித்தார்.

இந்தியாவின் இந்த அத்துமீறிய செயற்பாடு புதுமையானதொன்றல்ல. தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியா எப்பொழுதுமே சர்வதேச நியதிகளையும், சட்டங்களையும் மதித்து நடப்பதில்லை. இதற்கு தென்னாசியாவிலும், இந்துசமுத்திரத்திலும் இந்தியா தனது வல்லாதிக்கத்தைச் செலுத்த முற்படுவதே காரணமாகும்.

தென்னாசியாவில் இந்தியாவின் அத்துமீறல்களின் அளவை வரையறுத்துக் கூறமுடியாது. எல்லையை மீறி நேபாளத்தினுள் புகுந்து கிராமம் ஒன்றைச் சுற்றி வளைத்து சிலரைக் கைது செய்து வரும் அளவில் இருந்து - இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்றது - பெரும்போர்கள் வரையும் இந்த அத்துமீறல்கள் இருந்துள்ளன. அத்தோடு இராஜதந்திர ரீதியாகவும் பல அத்துமீறல்களுக்கு இந்தியா வழிகளை ஏற்பாடு செய்துள்ளது 1987இல் சிறிலங்காவுடன்செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையும் இந்திய இராணுவம் இலங்கை வந்து, புலிகளுடன் போரிட்டமையும், ஆறாவது 'சார்க்' மாநாட்டை இந்தியா குழப்பியமையும் இந்த வகையான அத்துமீறிய நடவடிக்கைகளிலேயே அடங்கும்.

அண்மைக்காலம் வரை தரைப் பரப்பில் தனது மேலாதிக்கத்தை படிப்படியாக விஸ்தரிக்க முற்பட்ட இந்தியா தற்பொழுது கடற்பரப்பிலும் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்க ஆரம்பித்துள்ளது. இதில் இந்து சமுத்திரத்தில் தனது செல்வாக்கை நிலை நிறுத்துவதே இந்தியாவின் இலக்காகும்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக வங்காள விரிகுடாவில் தனது செல்வாக்கை ஸ்திரப்படுத்துவதில் இந்தியா இறங்கியுள்ளமையே வங்காள விரிகுடாவில் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துப் புலிகளின் கப்பலைப் பிடித்துள்ளமையாகும். இந்தியாவின் கிழக்குக் கரையோரத்தில் இருந்து வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு மூலையில் இருக்கும் அந்தமான் - நிக்கோபார் தீவுகள் வரை வங்காள விரிகுடாப் பகுதியை இந்தியா முழுமையாகத் தனது ஆதிக்கக் கடற்பரப்பு என்று கருதுவதாகத் தெரிகிறது. அங்குள்ளசர்வ தேசநீர்ப்பரப்பை இந்தியா கவனத்தில் எடுப்பதாகஇல்லை. அவ்வாறு எடுப்பதாக இருப்பின் புலிகளின் கப்பல் எனக் கூறப்படும் கப்பலை இந்தியா கைப்பற்றியிருக்க முடியாது. இதற்குச் சர்வதேச விதிகள் இடம் கொடுக்க மாட்டாது.

தரை வழிப் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதன் மூலம்நேபாளம், பூட்டான்நாடுகளைத்தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்க முற்படும் இந்தியா கடல் ஆதிக்கத்தின் மூலம் முதலில் தென்னாசியாவில் உள்ள சிறிய தீவுகளை (மாலைதீவு, இலங்கை) ஆகியவற்றை தனது ஆதிக்கத்தினுள் / செல்வாக்கு மண்டலத்தினுள் கொண்டுவர எத்தனிக்கின்றது.

இந்தியாவின் இந்தப் போக்கானது எதிர்காலத்தில் தென்னாசியாவின் ஸ்திரத் தன்மையை மேலும் பலவீனப்படுத்தும். மேலும், தென்னாசியாவில் உள்ள சிறியநாடுகளின் இறைமைக்குப் பங்கமும் விளைவிக்கக் கூடியதாகும். இதேவேளை பிடிக்கப்பட்டது விடுதலைப் புலிகளின் கப்பல் என்பதைவிட இந்தியா சர்வதேச விதிகளை மீறியுள்ளது என்பதே முக்கியமான விவகாரம் என்பதை சிறிய நாடுகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஆசியாவுடனான அமெரி. உறவுகள் சம அந்தஸ்தைக் கொண்டிருக்கும்

—ஜோர்ஜ் புஷ்

(நியூயோர்க்)

எமது தேசிய பாரம்பரை ஐரோப்பாவை பின்பற்றியதாகவிருந்தாலும்; எமது எதிர்காலம் ஆசிய கூட்டுறவோடு சம அந்தஸ்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுதெளிவு என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த வாரம் ஆசிய சமகத்தில் உரையாற்றியபோதே ஜோர்ஜ் புஷ் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்;

ஜப்பானை மிக நெருங்கிய மதிப்பிற்குரிய சக நாடாக அமெரிக்கா கருதுகிறது என்றும்;

கிழக்கைரோப்பிய ஜனநாயக வளர்ச்சிக்கும் வளைகுடா யுத்தத்தின்பேதும் ஜப்பான் நிதி உதவியளித்துள்ளது என்றும் இனிமேல் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு வளர்ந்துவரும் என்றும் தெரிவித்தார் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக வளர்ந்து வந்த அமெரிக்க ஜப்பான் வெறுப்பு இப்போது கிடையாது.

வர்த்தகத்தை மையமாகக் கொண்டே இரு நாடுகளுக்கும் இடையில் வேற்றுமைகள் வளர்ந்தன இனிமேலும் இந்த நிலை தொடர இரு நாடுகளுமே சந்தர்ப்பமளிக்கக் கூடாது. இவ்வாறு ஜோர்ஜ் புஷ் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜோர்ஜ் புஷ் தனது ஹவாய் விஜயத்தின் பின்னர் ஆசிய நாடுகளிடையே சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்க நிதியை

# யூதகுடியேற்றங்களுக்கு பயன்படுத்தத் தடை

(வாஷிங்டன்)

அமெரிக்காவால் இஸ்ரேலுக்கு வழங்கப்படும் நிதியுதவியை அரபுப் பிரதேசங்களில் இடம் பெறும் யூத குடியேற்றங்களுக்கு உபயோகப் படுத்தக் கூடாதென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கடந்த வாரம் அமெரிக்காவிலுள்ள யூத நிறுவனங்களின் தலைவர்கள் அமெரிக்க ஜனாதிபதியை சந்தித்து இஸ்ரேல் பெறவுள்ள கடனுதவி பற்றி ஆராய்ந்தபோதே அமெரிக்க ஜனாதிபதி இந்த எச்சரிக்கையினை விடுத்தார்.

அத்துடன் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள அரபுப் பிரதேசங்களில் யூத குடியேற்றங்கள் நடைபெறுவதையும் அவர் கண்டித்தார்.

## தாய்வானில்

# ரயில் விபத்தில் 33பேர் பலி

(தைபே)

தாய்வானில் பாரிய ரயில் விபத்தில் 33 பேர் பலியானார்கள் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று வடமேற்கு தாய்வானில் இரு ரயில்கள் மோதிக் கொண்டதில் இவ்விபத்து இடம்பெற்றது.

காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமாக உள்ளனர். என்பதால் இறப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## உரியவர் பெறவும்

இராசப்பு அகப்பின் என்பவருடைய குடும்ப உலர் உணவு விநியோகத்திற்கான அனுமதி அட்டை யாழ் மடத்தடியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் விபரம் கூறிப்பெற்றுக் கொள்ளவும்

## நாளைக்குள் அனுப்பிவைக்கவும்

பாடசாலை, கோட்டம், கொத்தணி, மட்டத்தில் பங்குபற்றிய மாணவர் விபரங்களை நாளை 20 ஆம் திகதிக்குள் கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## நஷ்டஈடு தொடர்பாக பேச்சுவார்த்தை

(கொழும்பு)

வளைகுடா போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு வழங்கப்படவிருக்கும் நஷ்டஈடுத் தொகை தொடர்பாக ஐ. நா. நிவாரண நிதிப்பிரிவில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருவதாக தொழில் அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

மாதிரிப்

இப்படிவத்தினை யாழ். செயலகம் வழங்குமென முன்னர் அறிவிக்கப்பட்டது. தற்போது செயலகத்தால் அது வழங்குவது என்பது நடைமுறைச் சாத்தியம் இல்லை என்பதால் அதனை நுகர்வோர் தாமே தயாரித்து அட்டையுடன் வழங்கி பொருள்களை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது மாதிரிப்படிவத்தை கிராம சேவகர் அலுவலகம், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பார்வையிடலாம். (ஈ)

மொழிப்

இந்த நாட்டில் எல்லாச் சமூகங்களும் தமது கருத்துக்களை தமது மொழியில் வெளியிட சந்தர்ப்பம் வழங்க வேண்டும். சிறுபான்மை மக்களிடையே உரிமைகளுக்கு மதிப்பளித்தால் தான் இந்த நாட்டில் சாந்தி சமாதான சக வாழ்வை ஏற்படுத்த முடியும்.

சகல இன மக்களுக்கும் பொருளாதார சமய, கல்வி சுதந்திரம் சமநிலையில் பிரித்தளிக்கப்பட வேண்டும் இப்படி சமமாக கிடைக்காமல் போகும் என்ற அச்சமும் அவநம்பிக்கையும் ஏற்படுமானால் சமாதான சக வாழ்வை ஏற்படுத்த முடியாது

சமூக ரீதியில் உரிமைகள் கிடைக்காமல் போகும் என்ற அச்சமும் பீதியும் ஏற்படுமானால் அங்கு சமாதானம் ஏற்பட முடியாது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்

சிந்தனைப்

கின்றன. இந் நிறுவனங்களின் பெரும்பாலானவை அவற்றுக்கு உதவி வழங்கும் மேற்கத்தைய நாட்டு நிறுவனங்களின் சிந்தனைக்கு ஏற்ப செயற்படுவதாக விமர்சனங்கள் பரவலாக எழுந்ததைத் தொடர்ந்து மேற்படி முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம் முயற்சியினால் ஐரோப்பிய சிந்தனையில் மூழ்கியிருக்கும் பல அரச சார்பற்ற நிறுவனங்களை சுய சிந்தனைக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தீவகப்

படைத்தளபதி ஆகியோர் தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்து புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டுத் திரும்பினர் என கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில், நாகவிகாரை ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கும் அமைச்சர்கள் குழு சென்று வழிபட்டதாகவும்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சிப் பேச்சாளர் சிவதாசன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர்கள் உட்படப்பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர் என்றும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.

ளைகளைக் கோஷமிட்டு வெளிப்படுத்தினர். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் யாழ் செயலகத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் யாழ். செயலக அதிகாரிகளிடம் தாம் கொண்டு வந்தமகஜரை கையளித்தனர்.

உரும்பிராய், செல்வபுரம், யோகபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து புறப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், தமிழ் மக்களின் அவலத்தை வெளிப்படுத்துமுகமாக பசியாலும், வறுமையாலும் இறந்தவர் ஒருவர் மாதிரியான ஒப்பனை செய்யப்பட்ட சடலம் பாடையில் வைத்து, மேளம் தட்டி பலாலி வீதி வழியாக யாழ். நகரை நோக்கிக் கொண்டு வரப்பட்டது. அது நேற்று யாழ் செயலக வளவில் தகனம் செய்யப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் வறுமையால் உரும்பிராய் பகுதியில் இறந்த மாரி என்பவரின் பெயர் அந்த ஒப்பனைச் சடலத்திற்குச் சூட்டப்பட்டே எடுத்துவரப்பட்டது.

யாழ் இந்துமகளிர் கல்லூரியிலிருந்து நேற்றுக்காலை ஆரம்பமான இன்னொரு பேரணி, ஸ்ரான்லிவீதிசென்று அங்கிருந்து பிரதான வீதி வழியாக யாழ் செயலகம் வந்தடைந்தது.

'பொருளாதாரத் தடையை நீக்கு, பட்டினியைப்போக்கு, பயிலும் இடங்களில் இராணுவம் துயிலா', 'தீவகத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்று' என்ற கோஷங்களுடன், 'தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல் - இந்த சகத்தினை அழித்திடுவோம்' போன்ற சுலோக அட்டைகளும் சுமந்து வரப்பட்டன,

மேலதிக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தேவநேசன் நேசையா, யாழ் அரச அதிபர் மாணிக்கவாசகர் ஆகியோரின் முகவரிகள் இடப்பட்ட மகஜர்கள் யாழ். மேலதிக அரச அதிபர் சண்முகநாதனிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றைப்பெற்றுக் கொண்ட அவர், எம்மால் முடிந்த அளவு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வோம் என்று வாக்குறுதியளித்தார்.

இந்த மகஜரின் மேலும் ஒரு பிரதிசர்வதேசசெஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. (இ)

## 9 பல்கலை. கல்லூரிகள் நாளை திறப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் ஒன்பது இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் நாளை 20 ஆம் திகதி திறந்து வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை 1992 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செயற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதே நேரம் வடக்குக் கிழக்கு உட்பட அனைத்து கல்லூரிகளிலும் சேர்வதற்கு தற்போது 2000 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும், இக்கல்லூரிகளின் ஆரம்ப வேலைகளுக்கென பத்துக் கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாவீரர் எழுச்சி விழா; இன்றைய கூட்டங்கள்

மாவீரர் எழுச்சி வாரக் கூட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் பிரிவில் மாலை 7-00 மணிக்கு

★ புன்னாலைக்கட்டுவன் சந்தி அருகாமையிலும்

★ மூளாய் பிள்ளையார் கோவிலடி மைதானத்திலும்

தென்மராட்சிப் பிரிவில்

★ உசன் மாசார் பாடசாலையிலும், நாவற்குழி மகாவித்தியாலயத்திலும்.

வடமராட்சிப் பிரிவில்

★ செம்பியன் பற்று வடக்கு றோ. க. பாடசாலை மண்டபத்திலும்

தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான எழுச்சிக் கூட்டம் யாழ். ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்திலும், நாவலடியிலும் இன்று மாலை 3-00 மணிக்கும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்குவார்கள்.

தமிழீழ மக்கள் அனைவரும் இந்த எழுச்சி வார நிகழ்வுகளில் அணிதிரளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## இந்திய - சோவியத் ஒப்பந்தம் நீடிப்பு

(டில்லி)

இந்தியாவும் சோவியத் ரஷ்யாவும் தமக்கிடையே அமைதி மற்றும் நட்புறவுக்கான 1971 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீளவும் இருபது ஆண்டு காலத்துக்கு நீடிக்க உள்ளன.

இதேவேளை இந்தியாவும் சோவியத் ரஷ்யாவும் 1992 ஆம் ஆண்டிற்கான வர்த்தக ஒப்பந்தத்தை விரைவிலேயே செய்து முடிக்க உள்ளன. சோவியத் ரஷ்யாவுடனான வர்த்தக வழிமுறைகள் அந்த நாட்டில் இடம்பெற்ற சமீபத்திய மாற்றங்களைக் கருத்தில் இருத்தித் தயாரிக்கப்பட்டு வருகின்றன. வர்த்தகத் துறை இணை அமைச்சர் நேற்று டில்லியில் இதனை வெளியிட்டார்.

## கட்டைக்காட்டு மாணவர் உணவு முத்திரை பெறவும்

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவர்களுக்கான வைகாசி, ஆனி, ஆடி மாதங்களுக்கான மாணவர் உணவுமுத்திரைகள் எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களும் செம்பியன் பற்றில் வைத்து வழங்கப்படவுள்ளன.

மேற்படி உணவு முத்திரைகளை உரிய மாணவர்கள் அல்லது பெற்றோரை வந்து பெற்றுக் கொள்ளுமாறு அதன் அதிபர் கேட்டுள்ளார்.

முஸ்லிம்களின்

## வெற்றி தோல்விகளை ஆராய கமிஷன் வேண்டும்

- ஹமீட்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்களின் ஐம்பது ஆண்டு கால வெற்றி தோல்வியை ஆராய கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டுமென சிறிலங்காவின் நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 50 ஆண்டு காலத்தில் முஸ்லிம்கள் சமூக, கல்வி, பொருளாதார, அரசியல் துறைகளில் கண்ட அனுபவங்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவற்றை ஆராயவே கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## சோலங்கியின் கருத்திற்கு பாரதீய ஜனதா விமர்சனம்

(அகமதாபாத்)

இந்திய சோவியத் உறவுகள் திருப்தியளிப்பதாக உள்ளன என்று இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி கூறியது குறித்து பாரதீய ஜனதாக் கட்சி விமர்சித்துள்ளது.

அகமதாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இக்கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி மாதவ் சிங் சோலங்கியின் கருத்தைக் கேட்டு தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

அணுசக்தித்துறை குறித்து பாகிஸ்தான் ஐ. நா. சபையில் வைத்த கருத்தை சோவியத் யூனியன் ஆதரித்துள்ளது. இது விஷயத்தில் இந்தியாவிற்கு எதிராக சோவியத் வாக்களித்துள்ளது. ஆனால் இது குறித்து மாதவ் சிங் சோலங்கி தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை என்றும் எல். கே. அத்வானி தெரிவித்தார்.

இந்தியாவின்

நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் அங்கத்துவ நாடுகள் எடுத்திருந்த நிலைப்பாட்டையே அமைச்சர் ஹேரத் கூறியிருந்தார் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில்விக்கிரமசிங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

ஹமில்டன்

இவர் பிரிட்டிஷ் றோயல் யுத்தப்பயிற்சிக் கல்லூரியிலும் வேறும்பல வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்றவர். 1988ஆம் ஆண்டு இராணுவத் தளபதி பாகப்பதவி ஏற்றார் இவரது பதவிக்காலத்திலேயே இராணுவத்தினரது எண்ணிக்கை இருமடங்காக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஜெனரல் வனசிங்கா ஆயுதப் படையினரின் இறுதி நோக்கம் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசாங்கத்தின் நிர்வாகத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு வழிவகுப்பதாகும் அதற்கான நடவடிக்கையை எடுப்பதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரச ஊழியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த சகல அரச ஊழியர்களுக்குமான (ஆசிரியர்கள் உட்பட) விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை காலை பத்து மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மேற்படி அரச ஊழியர்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது என்றும் எனவே அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டிருக்கின்றது

## உலர் உணவு அட்டை மீளாய்வு

(குருநகர்)

குருநகர் பகுதி கிராம சேவை அதிகாரிகளால் உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

தொழில் வாய்ப்பு இழந்த சேதங்களுக்குள்ளான குடும்பங்களின் விபரங்கள் அதிகாரிகளால் பொதுமக்களிடம் இருந்து கேட்கப்படுகின்றன.

மீளாய்வுக்கான காரணம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (ஈ)

இராணுவ

நடைபெற்ற இத்தாக்குதலினால் இராணுவத்தினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டபோதிலும் அவை தொடர்பான விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கலிபர்

நடைபெற்ற இத்தாக்குதலை தொடர்ந்து பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி துப்பாக்கிச்சூடு நடாத்தினர்.

அதேவேளை மாலை 7 30 மணியளவில் கீரிமலைப் பகுதியிலிருந்து சேந்தாங்குளம் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டிருக்கின்றது.

சிங்களப்

தொடர்பாக யாழ்ப்பாணத்திற்கு சென்றுவர பத்திரிகையாளர் அரசாங்கத்தை கோரியுள்ளனர் இவர்களது கோரிக்கையை அரசாங்கம்பரிசீலனை செய்துவருவதாகத் தெரிகிறது.


1

வானோசை

1991

# புலிகளின் குரல்

VOICE OF THE TIGERS

அன்புடையீர்!

புலிகளின் குரல் வானொலியின் ஓராண்டு பூர்த்தி விழாவிலும் அதையொட்டிய பரிசளிப்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

❋ ஆரம்பம்

❋ நாட்டியாஞ்சலி ❋ தளிர்கள் ❋ நாடகம்

❋ வில்லிசை ❋ பரிசளிப்பு ❋ வாழ்த்துரை

❋ ஆய்வுரை ❋ இசைநிகழ்ச்சி ❋ நிறைவு



யாழ். இந்துக்கல்லூரி

1991-11-20 புதன்கிழமை மாலை 3-00 மணி

பிரவேசம் இலவசம்

'புலிகளின்குரல்' தமிழீழம் (B/3496)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, ஆம் 31 இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.